இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 50 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 12 – சனிக்கிழமை 28 செப்டம்பர் 2024 – கோவை ★★ 16 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 50: Thiruvalluvar Year - 2055 - Purataasi 12 - Saturday 28 September 2024 - Kovai ★★ 16 Pages ₹ 5.00






டெல்லி வருகை தந்த கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கழக பொருளாளர் – மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், தமிழ் அமைப்பினரும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## நாடாளுமன்ற கழக உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள்

# டெல்லியில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு!

## பிரதமரைச் சந்தித்து – தமிழ்நாட்டுத் திட்டங்களை நிறைவேற்ற நிதி வழங்குமாறு வலியுறுத்தினார்!

**புதுடெல்லி, செப்.28-**

**இரண்டு நாள் பயணமாக டெல்லி வருகை தந்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் உற்சாக வரவேற்பு அளித்தனர். பிரதமர் மோடி அவர்களை நேற்று சந்தித்து பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டுக்கான திட்டங்களை நிறைவேற்றிட ஒன்றிய அரசு வழங்க வேண்டிய நிதியை உடனடியாக விடுவிக்குமாறு வலியுறுத்தினார்.**

தமிழ்நாட்டின் வளர்ச்சித்திட்டங்களுக்குரிய நிதி ஒதுக்கீடு செய்வதில் ஒன்றிய பாஜக அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயல்பட்டு வருகிறது. சென்னை மெட்ரோ ரயில் 2ம் கட்ட திட்டத்திற்கு ஒன்றிய அரசின் பங்கான 7 ஆயிரத்து 425 கோடி ரூபாயில் ஒரு ரூபாய் கூட இன்னும் விடுவிக்கப்படவில்லை. இதே போல் 2023ம் ஆண்டு அடுத்தடுத்து 2 இயற்கை பேரிடர்களை தமிழ்நாடு சந்தித்த நிலையில், பேரிடர் நிவாரண நிதியாக 37 ஆயிரத்து 906 கோடி ரூபாயை தமிழ்நாடு அரசு கோரியது. ஆனால் 276 கோடி ரூபாயை மட்டுமே ஒன்றிய அரசு வழங்கியது.

இதேபோல் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிதியையும் ஒன்றிய அரசு நிறுத்தி வைத்துள்ளது.

இந்த நிலையில் இது தொடர்பாக பிரதமர் மோடியை சந்திப்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் மாலை டெல்லி வருகை தந்தார். டெல்லி விமான நிலையத்தில் முதலமைச்சருக்கு, உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.



திமுக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி , மக்களவை குழு தலைவர் டி.ஆர்.பாலு, மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா, மக்களவை கழகக் குழு துணைத் தலைவர் தயாநிதி மாறன், டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், மற்றும் எம்.பி.க்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். டெல்லி வாழ் தமிழர்கள் திரளாக கூடி மங்கள இசையுடன் முதலமைச்சரை வரவேற்றனர்.

---

## உன் தியாகம் பெரிது – உறுதி அதனினும் பெரிது ! சிறையிலிருந்து

# முன்னிலும் உரம் பெற்றவராய் வெளியில் வருகிறார் செந்தில் பாலாஜி !

## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வரவேற்று மகிழ்ச்சி !

**சென்னை, செப். 28-**

**கரூர் மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜிக்கு உச்சநீதி மன்றம் ஜாமீன் வழங்கியதைத் தொடர்ந்து தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட வலைதளப்பதிவில், “உன் தியாகம் பெரிது, உறுதி அதனினும் பெரிது! சிறையிலிருந்து முன்னிலும் உரம் பெற்றவராய் வெளியில் வருகிறார் சகோதரர் செந்தில்பாலாஜி. அவரை வருக! வருக! என வரவேற்கிறேன்” என மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.**

சட்ட விரோத பணப்பரிமாற்றம் செய்ததாக குற்றம் சாட்டி கடந்த ஜீன் மாதம் 14ஆம் தேதி அமைச்சராக இருந்த செந்தில் பாலாஜியை ஒரு தீவிரவாதியைப் போன்று மிகவும் அராஜக முறையில் அமலாக்கத் துறையினர் கைது செய்தனர். இதனையடுத்து அமைச்சர் பதவியை ராஜினாமா செய்த செந்தில்பாலாஜி கடந்த 15 மாதங்களுக்கும் மேலாக விசாரணைக் கைதியாக சிறையில் இருந்து வந்தார்.



செந்தில்பாலாஜியின் ஜாமீன் மனுவை சென்னை உயர்நீதி மன்றம் பலமுறை தள்ளுபடி செய்தது. இதனையடுத்து கடந்த மார்ச் மாதம் உச்சநீதி மன்றத்தில் செந்தில் பாலாஜி மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்தார். உச்சநீதி மன்றத்தில் செந்தில் பாலாஜிக்கு ஜாமீன் வழங்கக் கூடாது என அமலாக்கத்துறை சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் வாதிட்டனர்.

செந்தில்பாலாஜி சார்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், “செந்தில்பாலாஜி கடந்த ஆண்டு ஜீன் மாதம் சட்டத்திற்குப் புறம்பாக அமலாக்கத்துறையினரால் கைது செய்யப்பட்டார். அதற்குப் பிறகு அவரது உடல் நிலை பாதிக்கப்பட்டு இதய அறுவை சிகிச்சை செய்து கொண்டார். இருந்தும் தொடர்ந்து சிறையில் அடைக்கப்பட்டார். முகாந்திரமே இல்லாத இந்த வழக்கில் அமலாக்கத்துறை என்ன விசாரிக்கிறார்கள் என்றே எதுவும் தெரியவில்லை. எப்போது விசாரணை முடியும் என்றே தெரியவில்லை. அவரது உடல் நிலையைக் கருத்தில் கொண்டு இந்த வழக்கில் செந்தில்பாலாஜிக்கு ஜாமீன் வழங்க வேண்டும்” என வாதிட்டனர்.

இந்த வாதங்களைப் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் கடந்த ஆகஸ்ட் 20ந் தேதி தள்ளி வைத்தனர்.

இந்த வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் (26.9.2024) உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் அபஸ் எஸ்.ஓஹா மற்றும் அகஸ்டின் ஜார்ஜ் மாயிஷ் ஆகியோர் கொண்ட அமர்வில் நடைபெற்றது. விசாரணையில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் செந்தில்பாலாஜிக்கு நிபந்தனைகளுடன் கூடிய ஜாமீனை வழங்கினர்.

உச்சநீதிமன்றம் செந்தில்பாலாஜிக்கு ஜாமீன் வழங்கியதை வரவேற்று தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.09. 2024), வெளியிட்ட சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**“ஆருயிர்ச் சகோதரர் வி.செந்தில்பாலாஜி அவர்களுக்கு 471 நாட்களுக்குப் பிறகு, உச்சநீதிமன்றத்தால் பிணை கிடைத்திருக்கிறது.**

**அமலாக்கத் துறையானது, அரசியல் எதிரிகளை ஒடுக்கும் துறையாக மாற்றப்பட்ட தற்போதைய சூழலில், அதற்கு உச்சநீதிமன்றம் ஒன்றே விடியலாக இருக்கிறது.**

**எமர்ஜென்சி காலத்தில்கூட இவ்வளவு நாட்கள் சிறை வாழ்க்கை கிடையாது. அரசியல் சதிச் செயல்கள் 15 மாதங்கள் தொடர்ந்தன.**

**கைது செய்து சிறையிலேயே வைத்து விடுவதால் சகோதரர் செந்தில் பாலாஜியின் உறுதியைக் குலைக்க நினைத் தார்கள்.**

**முன்னிலும் உரம் பெற்றவராய்ச் சிறையில் இருந்து வெளியில் வரும் சகோதரர் செந்தில் பாலாஜியை வருக! வருக! என வரவேற்கிறேன்.**

**உன் தியாகம் பெரிது! உறுதி அதனினும் பெரிது!”**

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.